**(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)**

**Spl.SC.No. 41/2023** Dated:. 06.03.2026

( எதிரிகள் ஆஜர் .)

**அ.சா.10 திரு. காந்தி, காவல் துணைக் கண்காணிப்பாளர்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் காக்காத்தோப்பு ஒயின்ஷாப்பிற்கும் கிருஷ்ணா தியேட்டருக்கும் அரை கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். அ.சா.1 பாலமுருகன், அ.சா.2 மோகன்ராஜ் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒயின்ஷாப்பிற்கு வெளியே புங்கை மரம் அருகில் என காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. நான் கைப்பற்றிய ரீப்பர் சக்கையில் ரத்தம் இருந்ததாக அத்தாட்சியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் கண்காணிப்பாளர் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்து பிறப்பித்த உத்தரவு பின்னிட்டு முன் தேதியிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2 மோகன்ராஜ் முதலில் ஒரு புகார் வாக்குமூலம் அளித்திருந்தார் என்றும் அந்த வாக்குமூலம் வழக்கு பதிவு செய்வதற்கு ஏதுவாக இல்லை என்பதால் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நாளில், விதத்தில், இடத்தில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 பாலமுருகன் மதுபோதையில் AP ஷா மகாலுக்கு செல்லும் வழியில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:21:05 +0530

இருசக்கர வாகனத்தில் விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரினை நான் முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 என்னுடைய விசாரணையில் சம்பவம் காக்காத்தோப்பு ஒயின்ஷாப்பிற்கு உள்ளே நடந்ததாக குறிப்பிட்டு வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில், சொன்ன இடத்தில், விதத்தில் 1ம் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு வழக்கிற்கு தோதுவாக தயார் செய்து முன்நாளிட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| Tmt. N. Yasomathi,<br>Translator,<br>Mahila Court,<br>Salem. | Thiru. A. Mohammed Yasin,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

| | | |
|---|---|---|
| Co coordinator<br>Remote site | Deponent | Co coordinator<br>Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:21:10 +0530